**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 223/2010 P.W. 5/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | டாக்டர். திரு. ராமசுப்பு | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2,4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1, 3, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் தற்போது பல மருத்துவமனைகளில் மருத்துவராக சிகிட்சை அளிக்க செல்வேன். இதற்கு முன்பு நான் குளச்சல் ஜேம்ஸ் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 01.03.2010 ம் தேதி அன்று மாலை 05.00 மணி அளவில் கோடிமுனையைச் சார்ந்த ராஜ்குமார் என்பவர் சிகிட்சைக்காக என்னிடம் வந்தார். அவர் என்னிடம் கோடிமுனை சைமன்காலனியில் வைத்து தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாக என்னிடம் தெரிவித்தார். நான் அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள்காணப்பட்டது.

காயம் 1. மூக்கில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

காயம் 2. இடது கன்னத்தில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

காயம் 3. இடது கை பெருவிரலில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

காயம் 4. இடது காலில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

நான் மேற்படி நபரை உள்நோயாளியாக சிகிட்சைக்கு அனுமதித்து ஒருவாரத்தில் டிஸசார்ஜ் செய்துவிட்டேன். அவருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் என்று சான்று வழங்கினேன். **நான் அளித்த**

**காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** நான் அளித்த சான்றில் 3 வது காயம் கொடுங்காயம் என்று கூறப்பட்டுள்ளது. அது தவறாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி நபருக்கு எந்த எலும்பு முறிவும் இல்லாத நிலையில் மேற்படி சான்று **சாதாரண காயம்** என்றே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சாட்சிக் கேட்டுக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**பொதுவான குறுக்கு விசாரணை** :

ஒரு நபர் நிலைதடுமாறி கரடு முரடான இடத்தில் விழும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 223/2010 P.W. 6/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜாண் மகேஷ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜ்குமார் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2,4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1, 3, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். அ.சா1 என்னுடைய தந்தை. 01.03.2010 ம் தேதி மாலை 04.00 மணியளவில் சைமன்காலணி பஸ் ஸ்டாப்பில் வைத்து எனக்கும் மதன் என்பவருக்கும் சிறுவாக்குவாதம் ஏற்பட்டதில் எங்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. எங்களை அங்கு நின்றுக்கொண்டிருந்த நபர்கள் விலக்கிவிட்டார்கள்.

2. எனது தந்தை இதைக்கேள்விபட்டு கோடிமுனை பஸ் ஸ்டாப்பிற்கு வந்தபோது மதன், ரமேஷ், சிபு, பிரபு, ரதீஸ் ஆகியோர்கள் எனது தந்தையை தாக்கியதாக எனது அண்ணன் அந்தோணிராஜ் என்பவர் போண் மூலம் தகவல் கூறினார். எனது தந்தையை ஜேம்ஸ் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினார். நான் உடனே ஜேம்ஸ் மருத்துவமனைக்குச் சென்று எனது தந்தையைப் பார்த்தேன்.

3. எனது தந்தைக்கு மூக்கில் அடிபட்டு இரத்தம் கசிந்துக்கொண்டிருந்தது. இடது கை விரலில் விரல் மடங்கி இருந்தது. அதை அவரால் நிமிர்க்க முடியவில்லை. மருத்துவர் விரலில் எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென்று கூறினார். அவருக்கு Fracture உள்ளதாக மருத்துவர்

கூறியதின் அடிப்படையில் அதே மருத்துவமனையில் மறுநாள் ஆப்ரேசன் செய்தோம். இடது காலிலும் வீக்கம் இருந்தது. போலீசார்என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 223/2010 P.W. 7/L.W.7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. அனிமோன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. வர்க்கீஸ் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**2,4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1, 3, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். 12.03.2010 ம் வருடம் மாலை 05.00 மணியளவில் கோடிமுனை பஸ்டேண்டில் வைத்து போலீசார் அந்தயிடத்தைப் பார்த்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **அதிலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் ஆரோக்கிய மோகன் ராஜ் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று படித்துப்பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். கையெழுத்துக் கேட்டார்கள், போட்டுக்கொடுத்தேன். நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்துப்போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.